தமிழ்நாடு அரசு

# முதல் வகுப்பு

## முதல் பருவம்

### தொகுதி 1

# தமிழ்

# ENGLISH

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

## பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனித நேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

1st_std_Tamil_Term_I.indd 1 05/02/2022 16:21:11

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு – *2018*
திருத்திய பதிப்பு – *2019, 2020, 2022*

(புதிய பாடத்திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்ட நூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும்
தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம்
© SCERT 2018

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல்
பணிகள் கழகம்
www.textbooksonline.tn.nic.in



1st_std_Tamil_Term_I.indd 2 05/02/2022 16:21:13

## முகவுரை

குழந்தைகளின் உலகம் வண்ணமயமானது! விந்தைகள் பல நிறைந்தது!! அவர்களின் கற்பனைத்திறன் கானுயிர்களையும் நட்புடன் நடை பயில வைத்திடும். புதியன விரும்பும் அவர்தம் உற்சாக உள்ளம் அஃறிணைப் பொருள்களையும் அழகுதமிழ் பேசிடச் செய்திடும்.

அப்புதிய உலகில் குழந்தைகளோடு பயணம் செய்வது மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியும் நிறைந்தது.

தமிழ்க் குழந்தைகளின் பிஞ்சுக்கரங்கள் பற்றி, இப்புதிய பாடநூல்களின் துணைகொண்டு கீழ்க்கண்ட நோக்கங்களை அடைந்திடப் பெருமுயற்சி செய்துள்ளோம்.

- கற்றலை மனனத்தின் திசையில் இருந்து மாற்றி படைப்பின் பாதையில் பயணிக்க வைத்தல்.
- தமிழர்தம் தொன்மை, வரலாறு, பண்பாடு மற்றும் கலை, இலக்கியம் குறித்த பெருமித உணர்வை மாணவர்கள் பெறுதல்.
- தன்னம்பிக்கையுடன் அறிவியல் தொழில்நுட்பம் கைக்கொண்டு மாணவர்கள் நவீன உலகில் வெற்றிநடை பயில்வதை உறுதிசெய்தல்.
- அறிவுத்தேடலை வெறும் ஏட்டறிவாய்க் குறைத்து மதிப்பிடாமல் அறிவுச் சாளரமாய்ப் புத்தகங்கள் விரிந்து பரவி வழிகாட்டுதல்.

பாடநூலின் புதுமையான வடிவமைப்பு, ஆழமான பொருள் மற்றும் குழந்தைகளின் உளவியல் சார்ந்த அணுகுமுறை எனப் புதுமைகள் பல தாங்கி உங்களுடைய கரங்களில் இப்புதிய பாடநூல் தவழும்பொழுது, பெருமிதம் ததும்ப ஒரு புதிய உலகத்துக்குள் நீங்கள் நுழைவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.



2 STD Tamil Term I Front.indd 3 07/01/2022 19:19:53

# நாட்டுப்பண்

*ஜன கண மன அதிநாயக ஜய ஹே*
*பாரத பாக்ய விதாதா*
*பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா*
*திராவிட உத்கல பங்கா*
*விந்திய ஹிமாசல யமுனா கங்கா*
*உச்சல ஜலதி தரங்கா.*
*தவ சுப நாமே ஜாகே*
*தவ சுப ஆசிஸ மாகே*
*காஹே தவ ஜய காதா*
*ஜன கண மங்கள தாயக ஜய ஹே*
*பாரத பாக்ய விதாதா*
*ஜய ஹே ஜய ஹே ஜய ஹே*
*ஜய ஜய ஜய ஜய ஹே!*

– *மகாகவி இரவீந்திரநாத தாகூர்.*

---

## நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே!

உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!






1st_std_Tamil_Term_I.indd 4 05/02/2022 16:21:15

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.



## தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும், பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!




# தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

# உறுதிமொழி



இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.



1st_std_Tamil_Term_I.indd 6 05/02/2022 16:21:16

# தமிழ்

## முதல் வகுப்பு

### முதல் பருவம்



1st_std_Tamil_Term_I.indd 7 05/02/2022 16:21:16

# நம்பிக்கைக்குரிய ஆசிரியர்களே...!



## மனமகிழ் பக்கங்கள்

வகுப்பறையை நேயமிக்க இடமாக அறிமுகப்படுத்தும் நோக்கோடு 2–8 வரையிலான பக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் தங்கள் விருப்பம்போல் பாடி ஆடி விளையாடி, ஒருவரோடு ஒருவர் பழகிட இப்பக்கங்கள் ஏதுவாக இருக்கும்.

## முன்பழகு செயல்கள்

9–17 வரையிலான பக்கங்களில் உற்றுநோக்கல், கூர்ந்து கவனித்தல், விழி–விரல் ஒத்திசைவு, உருவங்களை ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் பார்த்தல், நுண்தசைப் பயிற்சி போன்றவை படிக்க, எழுத 'முன்பழகு செயல்களாகக்' கொடுக்கப்பட்டுள்ளன.





## உயிரெழுத்துகள்

ஒரே நாளில் நடைபெறுகின்ற, ஆறு படக்காட்சிகளைக் கொண்ட தொடர்நிகழ்வுக் கதையாக உயிரெழுத்துகள் அறிமுகம் அமைக்கப்பட்டுள்ளது. கலந்துரையாடவும், கற்பனையைத் தூண்டவும் இப்பகுதி வாய்ப்பளிக்கும்.





1st_std_Tamil_Term_I.indd 8 05/02/2022 16:21:16




## வளர்ச்சிப் படிநிலைகள்


ஒலி
வடிவம், வரி
வடிவம், எழுத்துகளோடு
ஒலியை ஒப்பிட்டுப் பார்த்தல்,
எழுத்துகளைத் தனியாகவும்,
சொற்களிலும் சொற்றொடரிலும்
அடையாளம் காணல், ஒலித்துப்
பழகுதல், எழுதிப் பழகுதல், மதிப்பீடு
என்ற வளர்ச்சிப் படிநிலைகளின்
அடிப்படையில் பாடப்பகுதிகள்
அமைந்துள்ளன.

## மெய்யெழுத்துகள்

மெய்யெழுத்துகள்
அறிமுகம் சிந்தனையைத்
தூண்டும் புதிர்த்தன்மையுடன்
அமைந்துள்ளது. கற்றலில்
ஆர்வத்துடன் ஈடுபட இப்பகுதி
வழிவகுக்கும்.












## எழுத்தோவியங்கள்

மனனம் செய்வதும் எழுதிப் பார்ப்பதுமே
மதிப்பீடு என்ற நிலை மாறி, எழுத்தோவியங்களில்
வண்ணம் தீட்டுதல், கோட்டோவியங்களை வரைதல்
போன்ற 'குழந்தைகளின் விருப்பச் செயல்கள்' மதிப்பீட்டுச்
செயல்களாக வடிவமைக்கப்பட்டிருக்கின்றன.




1st_std_Tamil_Term_I.indd 9 05/02/2022 16:21:16





1st_std_Tamil_Term_I.indd 10 05/02/2022 16:21:17



# பொருளடக்கம்


| வ. எண் | பாடத் தலைப்பு | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|
| 1. | பாடி ஆடி விளையாடலாம் | 1 | ஜூன் |
| 2. | மொழியோடு விளையாடு | 9 | ஜூன் |
| 3. | மகிழ்வோடு கற்போம் – 1 (உயிரெழுத்துகள்) | 18 | ஜூன், ஜூலை, ஆகஸ்டு |
| 4. | மகிழ்வோடு கற்போம் – 2 (மெய்யெழுத்துகள்) | 51 | ஆகஸ்டு, செப்டம்பர் |
| 5. | வந்த பாதை | 68 | செப்டம்பர் |




மின் நூல்

மதிப்பீடு



1st_std_Tamil_Term_I.indd 1 05/02/2022 16:21:18